**<u>O.S.No.466/2012</u>**

**<u>Date:22.01.2019</u>**

**<u>வாதி தரப்பு சாட்சி 2 - செல்லப்பாண்டி, த-பெ. ராஜு</u>**

**<u>(ராஜாக்கூர் கிராமம், கிராம நிர்வாக அலுவலர்)</u>**

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் கொண்டு வந்திருக்கிறீர்களா என்றால் கொண்டு வந்திருக்கிறேன். பசலி 1391க்கான பசலி அடங்கல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் தாவா சர்வே எண் 136 /1, 136 / 2ல் 10வது காலத்தில் என்ன இருக்கிறது என்றால் பயிர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பசலி 1390க்கான பசலி அடங்கல் வா.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ பதிவேடு, கணிணி பட்டா, புல வரைபடம், நடப்பு பசலி அடங்கல் ஆகியவை வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாச் சொத்து மேற்படி கிராமத்திற்கு உட்பட்டுதான் இருக்கிறதா என்றால் உட்பட்டு தான் இருக்கிறது. தாவா இடத்திற்கு அருகில் உள்ள நிலங்களை பற்றி தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கு மேற்குப்பக்கமும், கிழக்குப் பக்கமும் கால்வாய் உள்ளது என்றால் தாவா சொத்துக்கு கிழக்குப் பக்கம் கால்வாய் உள்ளது. அந்த கால்வாய் எதில் சேர்கிறது என்றால் வரிச்சியூர் கிராமத்தில் கண்மாயில் சேர்கிறது. தாவாச் சொத்தின் மேற்குப் பக்கமும் கால்வாய் உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.13-ல் எந்த ஒரு கால்வாயும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. நடப்பு பசலி அடங்கலில் வாய்க்கால் எந்த பகுதியில் உள்ளது என்று தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணைக்காக வாய்தா மாற்றப்படுகிறது)